பிஸ்மில்லாஹி

இஃது

# மாட்சிமைதங்கிய ஸுல்த்தானவர்கள் அட்ரியா நோப்பலில் செய்த

# துருக்கி சண்டை


தஞ்சாவூரைச் சேர்ந்த கண்ணுக்கூர்

மு. ஆதம்பாவா புலவர்களால்

இயற்றப்பட்டு



மகாதிவுள்வெவ அ. இமாம் சாயபு

அவர்களும்

கோங்காவெ மு. ஷியைத்துல்லா

அவர்களும்

ஷெயூர் கி. ப. பக்கிரி சாயபு அவர்களும்

செய்த பொருளுதவியால்

சென்னை, திருவல்லிக்கேணி,

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது

இதன் விலை 1914. அணா 4

பிஸ்மில்லாஹி

# துர்க்கி சண்டை

### காப்பு இன்னிசை.

அவ்வலக் தாகி ஆகிர்பல கோலமதாய்
செவ்வையாய் எவ்வுயிர்க்கும் சிறந்திரண் மீபவனே
பவ்வமறும் துரிக்கிசமர் பட்சமுடன் பாடுதற்கு
அவ்வுயிரு மெவ்வுயிராய் ஆளுறகு மான்றுணையே.

### நூல்

தன்ன தன தீன தனன தானனு தந்த
தன்ன தன தன தனன தனனு

மடல்விழு செங்கமல வாவியினி லறுகால்-வண்டு
மதுவுண்டு சங்கீத ராகமது பாடும்
தடவாழை கனிந்தொழுகும் சோலை-நல்ல
தந்தியுனை மந்திகளும் தாவிவிளை யாடும்
பனசமொடு மாங்கனிக வீந்தி-நாளும்
பழக்குலைகள் தவறாது பழுத்துதிரும் சோலை
தேனொழுகும் செங்கழனி பூத்து-நகர்
திசையெங்கும் கமகமெனத் தென்றலது வீசும்
சோதிமதில் சூழும் இஸ்தம்பூல்கோட்டை-அதில்
துங்கரண பீரங்கி துலங்குமணி மோர்சா
மாதிறமு மொவ்வாது மண்டபமு வீதி-யிள
மங்கையர்கள் வந்துலவு மணிநகர மேடை
வாரிதிகு ழிஸ்தம்பூல் நகரின்-உள்ள
வளமுரைக்க வேணுமென்றால் வெகுவிரிவ தாகும்
சேருமறை வானவரும் நீணோர்கள் யாரும்-புகழ்
செம்மலரை அனுதினமும் சிந்தையினி லேற்றும்
ஆதியொளி யாகியொளிர் அருமதிறசூலின்-சறகின்
அருமறைகள் தவறாமல் நெறிநடத்து கோமான்
நீதமுடன் செங்கோல் செலுத்த உலகெல்லாம்-நல்ல
நேயமுடன் அருள்புரிவை பின்னருளை ஆதி

பாட்சாக்கள் வீற்றிருப்பார் சூழ்ந்து-அந்த
படைமன்னர் வாளுடனே பந்திபந்தி யாக
காட்சியுயர் சுல்தானப்துல் மஜீதுமகனாரும்-சோதி
கதிரிலகு பொற்றவிசில் கவின்பெற விருந்தார்
மங்கையர்கள் வெண்கவரி வீச-வேத
மறையவர்கள் தீன்கூறி மன்னவரை வாழ்த்த
துங்கரண மல்லாரி தம்பூர்முழங்க-வெகு
துடியானை காளமொடு நாகசுர மூத
மக்க மொடு மக்கிடிபமன் தேசம்-நல்ல
மகிமையுள சாமுமிசிர் தாயிபொடு கூபா
சுக்குத்தரி மங்கோலி சைய்பேரி நகரும்-அந்த
ஜட்டல்ஜா திருப்போலி அதிரியா நோப்பல்
திருப்போலீ நகர்தனிலே யித்தாலிபடையை-அவர்
தீர்க்க சமர் வென்றுமே செங்கோலு மோங்க
மறுபடியும் இதாலிஅரசன்-நல்ல
மந்திரிமார் தங்களுடன் யோசனைகள் செய்து
இட்டமுடன் பேரரசர்க் கெல்லாமுரைத்து-அந்த
யீரோப்பதனைவிட்டு துரிக்கிகளை யோட்ட
மட்டில்லா புகழ்பெருத்த தேசம்-நால்
வளம்பெருகு பால்கானை யாளும்
கிரீக்கருடன் பல்க்கேரி சர்வியர்க்குச் சொல்ல-இன்றேனும்
கீர்த்தியுள சலோனிக்கா மொன்றனிக்கிகூடி
கிரீடமுடி ருஷியனின் காலடி பணிந்து-உனது
கெடிபெருகு பட்டாள முதவிதர வேணும்
நேருடைய துருக்கிகளை வென்று-நமது
நிலைநாட்ட வேணுமென்று பல்கேரி சொல்ல
உறுதிமொழி யிதுவென்று சொல்லி-அப்போ
உடன்பட்டு ருஷியனும் எதுசொல்லு வானாம்
அதிரியா நோப்பல் தனைக்கேளு-அதற்கு
அட்டி சொன்னால் சேனைகளைக் கூட்டி
அதிரியா நோப்பல்தனைப் பிடித்து-நீயும்
அரசாக இருமென்று ருஷியா சொன்னான்

மகிமைசெறிசுல்தானே கேளீர்-உமது
வளம்பெருகு மதிரியா விட்டுவிட வேணும்
பகைவளரும் பல்கேரிக் கென்று- அந்த
பார்லிமென்டினுள்ளவர்கள் பல்காலும் சொன்னார்
படைகளுடன் வந்தாலும் வாட்டும்-அந்த
பதிவிடுவதில்லையென்று பாராசர் சொல்ல
கொடுப்பதில்லை யென்றுசொன்ன செய்தி-சோபியா
கொற்றவனும் காதினாற் கேட்டுவெகுண் டானும்
நெடுநாளாய் யோசனைகள் செய்து-சேர்ந்த
நேயமுறுசஞ்சாலி குண்டுகளை யேற்றி
தடமகுட ருஷியனின் சைன்னியத்தைக்கூட்டி-வெகு
தைரியமாய் சோபியா நகர் தனிலிருத்தி
ரேக்கலா எழுநூறு மேற்றி-பெரிய
நிலையான பீரங்கி யிருநூறுங்கூட
ஊக்கமுள துரகதங்கள் சூழ-மனம்
உறுதியுள கர்னல்களும் குதிரையின்மேலேறி
கெடிமுரசு தம்பூரடிக்க-படி
டுடுகிடென டக்காவும் டங்கா முழங்க
குடைவிருது ஜண்டாக்க ளோங்க-[illegible]வை
கொடிகளும் சூரியனைக் காணாது மறைக்க
காலாட் படைகளொரு லட்சம்-நல்ல
கனத்தபடை மன்னர்களும் கத்திகையிலேந்தி
வேலாட்களணி யணியாய் வருக-அந்த
வேந்தனெனும் பல்கேரி ராஜனுடை படைகள்
சுதைபெருகு சோபியா நீங்கி-படை
சுக்குத்தரி மங்கோலி சைய்பேரி தாண்டி
அதிரியா நோப்பல் தனில்வந்து-அங்கே
அழகான கூடார மணியாய் விரித்து
ஆயிரத்து தொளாயிரத்துபதின்மூன்றில்-நல்ல
அழகான எப்பிரல் மாசம்பதினேழில்
ஆயுதங்கள் பளபளென மின்ன-பல்கேரி
அடித்தார்கள் ரணபேரி சமர்கொடியை யேற்றி

பார்த்தார்கள் துரிக்கிபடையோர்கள்-சுக்கிரி
பாட்சாவுக் கிதுசெய்தி சொல்ல
கர்த்தனுட செயலிது தானென்று-பாட்சா
கடுகஒரு தந்தியினை கணக்கா யெழுதி
காட்சிபெரு மிஸ்த்தம்பூல் நகரில்-வாழும்
கனகமுடி மன்னர்புகழ் சுல்தானுக் கனுப்ப
மாட்சிமைசேர் சுல்த்தானும் பார்த்து-ஆதி
வல்லவனை யுன்சித்த மெப்படியோ வென்று
சுக்கிரி பெனுஷ்வாட்சா நீர்கேள்வீர்-சண்டை
சுருக்க கக் கொடுமென்று தந்தியினிலோத
தக்கோன் கிருபையென்று பாட்சா-தனது
சைனியத்தை தயாரென்று சொன்னார்
அதுசெய்தி துரிக்கிகளும் கேட்டு-அவர்
ஆயுதங்கள் தானணிந்து கைவாளுமேந்தி
கதியான குதிரைகளிலேறி-பாரும்
கிடுகிடெனவீரியர்கள் பாட்சாமுன் வந்தார்
வந்ததொரு மன்னர்களைக் கண்டு-சுக்கிரி
மனமகிழ்ந்து கண்ணாலேயேறிட்டுப் பார்த்து
தொந்தமுறும் கிரீக்கருடன் பல்கேரிப்படைகள்-சுற்றி
சூழ்ந்தார்கள் நமதுடைய கோட்டை
இதுசெய்தி சுல்த்தானுக் குரைத்தேன்-அவர்
எப்படியும் சண்டைகொடு மென்றார்
அதுவே அமிர்தமொழி அரசருட வாக்கு-இப்போ
அடியுங்கள் பல்கேரி கிரீக்கர்களுக் கென்றார்
தங்களிஷ்டம் போல் நாம் நடப்போம்-இப்போ
சடுதியினி லுத்தாரம் தாருமெனக் கேட்டார்
வெங்கலத்தினு லுயர்த்தும் கோட்டை-அதின்
வெளியேழு கோட்டைகளு முண்டு
அக்கோட்டைவெளிதனிலே வந்து-பீரங்கி
அணியாய் நிறுத்தியதில் சஞ்சாலி போட்டு
தக்கபடி அடியுங்க ளென்று-சுக்கிரி
ஜல்தியாயுத்தாரம் கொடுத்தார் களப்போ
துருக்கிகளும் கோட்டை வெளிவந்து-வெகு

திடியான பீரங்கி மோர்சாவி லேற்றி
பருதிமதி இலங்கு கொடியேற்றி-நல்ல
படைமுரசு தம்பூரு துந்தியமு மார்ப்ப
பதினெட்டு விருதுகளு மோங்க-பச்சை
பீசபீல் கொடியொன்று முன்னால் பிடிக்க
பதரியே பல்கேரிப் படைகள்-குண்டு
படபடென்த் திடுதிடெனப் பலித்தாவும் தீர்த்தார்
அவுட்டாகி குண்டு வரக்கண்டு-துருக்கி
அடித்தார்க ளொருநூறு குண்டு
தவிடுபொடி யாகும்படி யாக-வைத்து
காட்டினார் துருக்கிகளும் பீரங்கி குண்டு
குமுறுதே கோடை யிடிபோலே-பீரங்கி
கொளுத்தினார் துருக்கிகளும் சொல்ல முடியாது
குமியுதே பிணக்காடு மலைபோல்-துருக்கி
குதிரைகளி லேறினார் பட்டயமு மேந்தி
வீசினார் வாளையுறை விட்டு-களத்தில்
விழுகுதே பல்கேரிப் படைகளொரு நூறு
தோசியெனும் பல்கேரிப் படையை-வாளால்
துண்டம்பட வெட்டியே துணித்தார்களப்போ
காலறுந்து விழுகிறது சிலது அங்கே
கைதரிந்து விழுகிறது சிலது
மேலழுந்து விழுகிறது சிலது-இன்னம்
மெய்சோர்ந்து விழுகிறது சிலது
தோளறுந்து விழுகிறது சிலது-தலை
துண்டாடி விழுகிறது சிலது
வேலறுந்து விழுகிறது சிலது-சொன்ன
வீரியம்போய் விழுகிறது சிலது
இப்படியாய் பல்கேரி கிரீக்கருட படையை-வெட்டி
இமகிரி போல் பிணமாய்க் குவித்தார்
செப்பரிய பல்கேரி சேனைத்தலைவோர்கள்-நல்ல
செய்தியொன்று சோபியா மன்னனுக்குக் கூறி
படைமன்னர் யாவர்களு மாண்டார்-துணைக்கு
படைவேணு மென்றுசொல்லி தந்தியினி லோத

திடமான படைகளறுபதி னாயிரமுங் கூட்டி-நல்ல
திடியான பீரங்கி மூன்றாறு மனுப்ப
சோபியா நகர்தனி லிருந்து-காவல்
சொல்லத் தொலையாத படை வருகிறதைக்கண்டு
தீவினைசூழ் பல்கேரிப் படைகள்-நமக்கு
ஜெயமென்று ரணபேரி யடித்தார்.

## விருத்தம்

அதுகண்டு சுக்கிரி பாட்சா அனல்பொரி கதுவக் கண்ணில்
துதிபெரும் துருக்கி மாரை சுருக்கினி லழைத்துச் சொல்வார்
கதிபெற மனது நாடி கடலைப்போல் வந்த சேனை
ததிபிது போல்கிட்டாது தகர்த்து ரேடியு மென்றார்

## ப்தம் பல்லவி

துருக்கிகள் அடித்தாரே-பல்கேரி
பெருக்கமுடன் சமர்புரிந்தாரே.

## அனுபல்லவி

துருக்கிக ளடித்தாரே
செருக்கள முடித்தாரே
துரத்தி பல்கேரியரை
கரித்திரணங்கள் செய்து-துருக்கி

## சரணங்கள்

வெடிகுண்டு புகைகுண்டு விடுத்தாரே-துருக்கி
வெகுசனங்களைக் கொன்று மடித்தாரே
மடியமடிய வந்து வளைத்தாரே-குண்டு
மண்ணிடம் கொள்ளாம விரைத்தாரே

வந்து வளைப வரும்
தந்திரங்கள் செய்ப வரும்
பிந்தி வருப வரும்
குந்தி யிருப்ப வரும்
முந்தி முடுகு வரும்
நொந்து படுப்ப வரும்

பந்திபந்தி நிற்ப வரும்
குந்திகுந்தி யோடு வரும்
இப்படி வருப வரும்
அப்படியே யற்றுவிழ
செப்படி குதிரைவிட்டு
சிதறப் பொடிபடுத்தி- துருக்கி

இருகிறத்தவர் சண்டைபுரிந்தாரே-யெங்கும்
ஏகமாய் பிணமலை குவித்தாரே
கருட்குருந்துகளைக் கொட்டி யிடித்தாரே-குண்டு
கணக்காக சொல்லிச்சொல்லி யடித்தாரே

பீட்டி யெறிப வரும்
மாட்டி விடுப வரும்
நீட்டி யெடுத்த வரும்
மீட்டி யிழுப்ப வரும்
கோட்டிபுரிப வரும்
காட்டிகமாய் நிற்ப வரும்
பாட்டுப் படிப்ப வரும்
பட்டாப்பிடிப்ப வரும்
விடுத்தாரே தாகதம்
வழிந்தோட ரணசோரி
தடிந்தாரே வசுதரை
தகர்த்து சிதையும்படி- துருக்கி

சொல்லொண்ணாக் கொடுஞ்சமர் புரிந்தாரே-யெழும்பு
தூசியினால் சூரியனை மறைத்தாரே
கொல்லுவேனென் றெட்டி குதித்தாரே-வெகு
கோரமுடன் பல்லைக் கடித்தாரே

தாளாம லோடு வரும்
வாளாலே வெட்டு வரும்
கோலா லடிப்ப வரும்
கீளால் விழுப வரும்
வேலாலே குத்து வரும்

மீளாமல் சாகு வரும்
பாலா யெறிய வரும்
பாழாய்கிடப்ப வரும்
பட்டாரே பல்கேரி
பதினாயிரஞ் சனம்
கொட்டுமுரசுகளும்
குப்பென் றவிந்தவிழ துருக்கி

இவ்விதமா யேழு நாள்மட்டும்-சண்டை
இகழ்பரிந்து துருக்கிகளி லாயிரத்திய றநூறு மாண்டு
அவ்வவரும் ஆயாசம்கொண்டு-நல்ல
அருமறைதேர் பாட்சாவுக் குரைத்து
நாளைக்குசண்டையது செய்வோ-மென்று
நவினமிகு துருக்கிகளும் கோட்டைக்குள் ளானார்
வெளியினில் வண்டார்படை யெல்லாம்-அவர்
வெகுவிசன மாகவே கூடாரம் சேர்ந்தார
கூடாரந்தனிலிருந்து துரைகள்-நல்ல
கூருகவெகுநேரம் யோசனைகள் செய்து
படும்பாடு பட்டாலும் நாங்கள்-அதிரியா
பட்டணத்தை யெப்படியும் பிடித்திடுவோ மென்று
எண்ணியந்தப் பல்கேரி சர்வியரின் படைகள்-ராத்திரி
யிருநூறு பீரங்கி தயாராகச் செய்து
மண்ணிலங்கள்கொள்ளாது குண்டு-வைத்து
மளமளென மாரிபோல் பொழிந்தார்
இதுசெய்தி யிஸ்தம்பூலுக்கோத-சுல்தான்
யென்றபடி பாருமென் றெழுதினார் தந்தி
காதலுடன் தந்திதனைப் பார்த்து-பாட்சா
கனமாக வொருசெய்திகாவலர்க்குச் சொல்வார்
கோட்டைக்குள் படைகள் வருமட்டும்-பதில்
கொடுக்காம லிருக்கவென் றுத்திரவு சொன்னார்
கொட்டினார் குண்டுகளை பல்கேரி வீரர்-பதில்
குண்டொன்றும் வாராததைக் கண்ணாலே கண்டு
ஓடினார் துர்க்கியர்க ளென்று-அவர்

ஒருமிக்க சைன்னியத்தை ஒக்கவே கூட்டி
தேடியே கோட்டைக்குள் சென்றார்-வெகு
திறமான வீரர்களும் சேனை தளத் தோடே
கண்டார்கள் துருக்கியர்களந்த-துஷ்ட
கசடனுட சேனைகளும் கோட்டைக்குள் ளாக
கொண்டவிடி போலதிர்ந்து தாவும்-சட்டி
கொடுமையுள பீரங்கி கொளுத்தினாய்போ
அனலா யெரியுதே கோட்டை-அப்போ
அவிந்தார்கள் கோட்டைக்குள் பல்கேரி படைகள்
தணலா யெரிந்தார்கள் பட்டு-பல்கேரி
தந்திரங்கள் செய்தபடை யெல்லாம்
மாண்டதுபோய் மீதமுள்ள பேர்கள்-சோபியா
டூன்னெனும் பல்கேரி ராஜனுக்குச்சொல்ல
கண்டதில்லை யிதுசண்டை யென்று-மன்தில்
கருதியே யோசனைகள் செய்து
மனந்தனிலே யோசனைகள் செய்து-தனது
மைந்தனையு முன்னா லழைத்துவரச் சொல்லி
யெனதுடைய கண்மணியே கேளீர்-நமது
இஷ்டமுறுபட்டாள மத்தனையுங் கூட்டி
அதிரியா நோப்பல்தனை பிடித்து-நமது
அழகான சினாவைக்கொடி அலங்கத்தி லேற்றி
யெதிரிகளைப் பஞ்சுபஞ்சா யடித்து-நீயும்
இருந்தரசு புரியுமென இன்பமுடன் சொன்னான்
நலங்கொண்ட அதிரியா நோப்பல்தனை நானும்-நானு
நாளினில் பிடிக்கிறே னென்றுறுதிகூறி
தளங்கள் முப்பதாயிரமுஞ் சூழ-திடனாய்
சமர்பொருந்து சேவகர்கள் முன்னால் நடக்க
திடமுடைய படைகளையுங் கூட்டி-அவன்
திடீரென்று புறப்பட்டான் வெளியில்
படபடெனக் கொடிகள் விரித்தார்கள்-இன்னம்
பல்லாரி பம்பைகளும் சொல்ல முடியாது
ஏகாந்தமாய்ப் படையைக்கூட்டி-வந்து
எதிர்த்தார்க ளதிரியா நோப்பல்தனைச் சுற்றி

வேகமாய் வந்த படைகண்டு-பாட்சா
எரிபறந்து கண்சிவந்து ஏது சொல்லுவாராம்
வீணனெனும் பல்கேரி ராஜன்-இப்போ
வெகுபடைக ளனுப்பினான் சொல்லமுடியாது
இனிமனது அஞ்சாமல் நீங்கள்-குண்டு
எண்ணுமலடியுமென் றுத்திரவு சொன்னார்.

சந்தக்கும்மி.

1. பட்டணம் சுற்றி வளைத்திருக்கு மூர்த்த பல்கேரிவீரர்கள் பட்டுவிழ பட்டியிற்றிட கொடியிற்பெரு மிடியாற்றிய பாரப் பீரங்கி வைத்துக் கொளுத்துமென்றார்.
2, என்னமாய் குண்டு இறைத்தாலும் நாமின்றைக்குக்கோட்டை பிடிப்பாமென்று விகளிப்படை தகளிப்பட யெகிரிப்பொரி சிதறும்படி வேகமாய் குண்டு யிறைத்தாரே.
3. கண்டந்தப் பல்கேரி வீரர்களும் கண்ணில் அங்கிபறக்க மன மழன்று ககனம்பல சிகரங்களு நிகரன்றிய முன்வாசல் கோட்டைக்கு முற்றுகை போட்டாரே.
4. கோட்டைக்கு முற்றுகைபோடக்கண்டு பாட்சாகோபமிகவும் பெரிதாகி குலையும்படை துலையும்படி நிலையுங்கெட நடனம புரி குதிரையிலேறிக்கை வாளெடுத்தார்.
5. வாளையுறைவிட்டு பாட்சாவு மந்த வண்டர்படையிற்குதிரைவிட்டு விடமிஞ்சிய வடவைக்கன லடருந்திசை விசைமாருதம் வந்து வளைந்திடும் வாறதுபோல்.
6. வெட்டிப் பிணமலை தான்குவித்தா ரந்த வேந்தரெனும் சுக்கிரி பாக்ஷாவும் வேதத்தினை யோதிப்பரீதத்தினை நாவிற்சொலி வேறுவேறாகக் கிழித்தெறிந்தார்.
7. மாடுபோல் வந்து மடிந்தார்க ளந்தவண்டர் பெருவெள்ளச்சேனை யெல்லாம் மழமைச்சிறு குழலுஞ்சுரி அழகும்மிரு தனமுந்தி கழ் மங்கையர் நின்று மயங்கிடவே.
8. காலுமறுந்து குடற்சரிந்து அவர் கையுமற்றுக் களத்தில்விழ கதறிப்படை சிதறிப்பட உதிரத்தினில் நவரத்தின கேடகக்கத்தி மிதந்தனவால்.

### வேறு

சன்னென்று நெருப்பா யெரித்தாலும்-அவர்
எதிரில் வந்து மடிகிறதே யல்லாமல்
பின்னிடைந்து போகிறதைக் காணோம்-என்று
பெலமாக துருக்கிகளும் வாளினால் வெட்டி
இரவுபகலாய் சண்டை மூன்றுநாள்மட்டும்-பல்கேரி
யீராயிரத்தி முன்னூறு பட்டு விழுந்தார்கள்
கிருகிரெனத் துருக்கிகளும் வீழ்ந்து-ஆதி
கிருபையுட னறுனூறு சகிதாகிப்போனார்
மாடுபோல் வந்து மடிந்தார்கள்-அப்போ
மன்திறங்கி சக்கிரியு மேதுசொல்லு வாராம்
காடுசெடி யோடிப் பிழையாமல்-இவர்
கழுத்துகளைக் கத்திக்கிரை கொடுத்தார்
மகுடமுடி மன்னர்களை வெல்லும்-சக்கிரி
மன்னவரு மனதிரக்கம் செய்தார்க ளப்போ
அவ்விடத்தில் பல்கேரி பூண்டு-காண்ப
தரிதரிதாகும் தப்பாது சொன்னேன்
மாடுபோல் வந்து மடிகின்றார்-நாமு
மதுபோல் நடப்பதுவோ மனிதகுண மாகும்
தடமகுட ராஜருக்குச் சொல்ல-தங்கள்
தர்மகுண மெப்படியோ வென்றார்
தக்கபடி சபூர்க்கடலில் மூழ்கி-பாட்சா
சமாதான மென்நல்லோ கொடியிழுக்க சொன்னார்
மிக்கபெரும் சேனையுடன் பல்கேரி மைந்தன்-வெகு
விரைவாகக் கோட்டைக்குள் சேனையுடன் சென்றான்
அப்போது பாட்சாவும் வந்து-தங்கள்
அருமையுள வாளதனை கீழாகப்போட்டு
இப்பெரிய கோட்டைதனை யுனக்கு-நான்
இனமாய்க் கொடுத்தேனென் றுத்திரவு சொன்னார்
சொன்னவுடன் பல்கேரி மைந்த-னெங்கும்
துரந்தரமாய் நின்றபிறைக் கொடியை
வின்னப்படா திறக்கிவிட்டு-நம்து

விரிவான சிலுவைக்கொடி யேற்றுமென சொன்னான்
நின்று விழும் சிலுவைக் கொடிதன்னை-வெகு
நேரா யுயர்த்திவிட்டா ருப்பரிகை மேலே
பொன்றிகழும் மாடமுடன் கோட்டைக்-கெல்லாம்
புதிதான பல்கேரிக் காவலது வைத்து
எல்லாந் தனதுவச மாக்கி-பல்கேரி
இஷ்டமுடன் பாஷாவை முன்னழைத்து
சொல்லொண்ணா சோபியா போக-வென்ன
சொல்லுகிறீர் பாஷாநீ ரென்றான்
நல்லதென்று பாஷாவும் சொல்ல-அவன்
நாட்டமுடனே கூட்டியே சோபியா சென்றான்
மேல்சொன்ன மாசமது நாலுமொரு ரெண்டில்-அதிரிய
விழுந்ததே பல்கேரி ராஜனுட கையால்
சோபியா நகர்தனிலே வந்து-பல்கேரி
சொல்லத்தொலையா ததொரு சந்தோஷமாகி
மேவியே ஜட்டல்ஜா தன்னில்-வெகு
வேகமுடன் பீரங்கி சண்டையது கொடுத்தான்
மன்னர்புகழ் முகம்மதுகான் கேட்டு-ஆதி
வல்லவனை யென்னாளும் சிந்தையினி லெண்ணி
மன்னர்பதி னெண்மர்களும்வந்து எதிர்த்தாலும் சக்
மயங்காரே யென்று மனத்தெண்ணி
யேதோ விதுசமையந் தன்னில்-சுக்கிரி
யிறங்கியே தர்மநீதி செய்தார்
இதுவே பெரும்பெருமை யென்று-கோமான்
இனித்திருப்ப உதவிசெய் யிறைவனே யென்று
நால்வளமு ரூமிஸ்த்தம்பூல்-தன்னில்
நவரத்ன மணியொளிரு பொற்றவி சிருந்து
வாழ்வுபெரு மதிரியா நோப்பிலெனும் தேசம்-பல்கேரி
வண்டருட கையால் விழுந்ததே யென்று
ஆதிதனை ஐங்கொருத்தம் தொழுது-சுல்தான்
அருமறைதேர் கல்யதனில் கவனமிகவாகி
நீதிநெறி சுக்கிரியவர் செய்த-நல்ல
நேர்மையிது வென்றெண்ணி சந்தோஷமாவார்

ஈரேழு ஆயிரத்து நானூறு சதாம்-இதை
யிழந்துவிட உன்கிருபை யிப்படியு மாச்சோ
பாரேழும் படைத்தவனே யென்று-ஆதி
பராபரனை அனுதினமும் பணிந்து துஆகேட்டார்
மாட்சிமையோர் கேட்ட துஆப்போலெ-ஆதி
வல்லவனே யுன்கிருபை வெல்லவருள் வாயே
காட்சி பலவாகும் ஏதமானே-உன்
கடாட்சமது வைத்தருளுவாயே
சோதியாய் யெங்கு நிறைந்தோனே-ஆதி
தூய்யவனே உன் கிருபை சொந்தமருள்வாயே
சாதியுயர் துரிக்கிபடை வெல்ல-ஆதி
தற்பரனே உன்கிருபை மிக்க வருள்வாயே
யிகழ்புரியும் சத்ராதி யெவருமற்று" விழ-சுல்தான்
யிருந்தாசுபுரியவரு ளென்பானே யருள்வாய்
மகரவாரிதிசூழு மிஸ்தம்பூல் நகரில்-அந்த
மாநகரி லுள்ளவர்கள் மாவிசனமானார்
மக்கமதினமெமன் மஹரிபொடு ஆசியா-நல்ல
மன்னாபுதாயுபு பைத்தில் முகத்தீசு
திக்கெலாம் வெகுவிசனமாச்சு-இந்த
தீனோர்கள் யாவரும் சிந்தைமிக நொந்தார்
இன்னபடியா யுலகமெல்லாந் திகைத்து-இஸ்லாம்
இராங்கினிகள் கையேந்தி யிறைவனைக் கேட்டார்
அன்வருபே யென்னுமொரு சிங்கம்-அப்போ
அறிந்தாரே அதிரியா நோப்பளுட செய்தி

துஆ விருத்தம்

அன்பருக் கன்பாய்நின்ற அய்யனே அழிவில்லானே
உம்பருந் தேடக்காணு துலகெலாம் படைத்த நாதா
வன்பெரும் படையைவென்று வளம்பெரு மதிரியாவை
யென்பரயாக்கு வாயென் றிறைவனை யிரங்கிக்கேட்டார்.

கடலொரு நான்கு மூன்றும் கலந்துமே மையதாக
புடவியின் தருக்களெல்லாம் பிளந்துமே கலன்களாக்கி

திடமுடனதுகாட்சி செப்பரி தாசையாலே
அடர்படை வெல்லவெற்றி யருளுவாயாகுதாயே.

தொங்கல்

இந்தவிதமாக அன்வருபே யிறையோன் றனைப்போற்றி யிருந்து சொல்வார்—சொந்தமென அந்த அதிரி யாவை அஷ்டர் பல்கேரிக் களித்துவிட்டார்—எந்தவிதத்தாலு மினித்திருப்ப இறையோன் கிருபையுமிருப்பதாலே—சொந்தமென யெமன் தேசபாளும் துரையா முகம்மதே கியாவுக்கே.

மக்கத்தரயியுமதினத்தாரு மன்னர் சுல்த்தானை வெறுத்ததி னல்—துக்கம் பெருகவே அதிரியாவை சுமன்பல்கேரி வீழ்த்திவிட்டான்—தக்கம்வராமலே யிவர்களெல்லாஞ்சார்ந்து யிருக்கவேகெத்தெளிதி—மிக்கபெரும்படையா யெழுப்பி வீழ்ந்த அதிரியா திருப்ப செய்வீர்.

என்று ஒருகத்து தானெழுதி யெமனுக்கரசருக் கனுப்பி விட்டார்—சென்று வருங் சத்தை முகம்மதெகியா சிறப்பாய் பார்த்தங்கே யேது சொல்வார் மன்றல் குடை யிடு முகம்மதனர் வரிசை மார்க்கத்து கிழிவதாகும்—இன்று பகை நீங்கி நீங்களெல்லாம் இறைவர் சுல்தானைக் கொழுகு மென்ருர்.

கிஜாசு கட்டுள்ள அரபிமார்க்கு கிருபையுடனவ ரெழுதி விட்டார்—நேசமுடன் வந்த நிருபந்தன் நேர்மை பெரு கிய அரபிமாரும்—வாசமுடன் பார்த்து இஸ்தம்பூலில் வந்துயிறங்கினர் மன்னரெல்லாம்—பேரரசரெனும் சுல்த் தான் சமுகம்நின்று புண்ணியரே சலாம் யென்றுரைத் தார்.

சுல்த்தான் பிறத்தியும் சொன்ஞாப்போருமரபி கள் ளைவோருக்கும்—சொல்லத்தான் கேளும் துரைமகனே சொந்த அதிரியாவிழுந்ததினல்—எல்லாப்படைகளு மிப் போசென்று யேகமாய் வெட்டிக் கருவறுத்து—செல் வம் பொருந்திய அதிரியாவை சிறப்பாய் பிடிப்போ மென்றவரும்சொன்னர்.

வேறு

மகுமூது சௌக்கத்து பாட்சாவும் வந்தார்-நல்ல
மகிமை செரி யிபுருகிம் பாட்சாவும் வந்தார்
சேகுசனூசி யெனும் செல்வர்-அங்கே
சிறப்பாகவந்தல்லோ யேது சொல்லுவாராம்
இப்படியுமாச்சுதோ வென்று-அவர்
ஏகமாய் சேனைகளை வரவழைக்கச் சொல்லி
கப்பகலும் கோமானின் சமூகம்-இப்போ
சண்டைக்கு உத்தாரம் தாருமெனக் கேட்டார்
துருக்கிகளு மரபிகளும் சுல்தானபின்பு-காவு
சூழு மிஸ்தம்பூல் நகரம் சூறைமிக வாச்சி
செருக்குடைய ஸ்தம்பூல் நகரில்-நடக்கும்
செய்திகளு மப்படியே யிருக்க
மன்னனெனும் சோபியாவேந்தன்-அந்த
மகிமைசெறி ஜட்டல் ஜாமேல் சண்டை கொடுத்து
பின்னிடைந்து தட்டுகெட்டுஓடி-அவன்
படைகளிலு மனேகம்பேர் பட்டிறந்து போனார்
கமீதியா வென்னும்போர் கப்பல்-பல்கேரி
கப்பல்களைக்கண்டவுடன்டாருப்கிழித்து
சமீபத்தில் பீரங்கியேற்றி-குண்டு
தாட்டாக்கி கப்பல்களைக் கண்டதுண்டமாக்கி
செப்பரிய பல்கேரி மணவர்-ஒருநூறு
சேதமாய் போச்சு திதுவரைக்கும்
ஒப்பில்லான் கிருபைகளினலே இதில்
உள்ளபடிசொல்லுகிறேன் தப்பாம லிப்போ
பள்ளிதனில் சிலுவைகளை வைத்தான்-இஸ்லாம்
பத்திகள் பல்பேரின் பதுவாவும் மேற்றான்
பல்கேரிசெய்த அனியாயம்-அவனுக்கு
பலித்ததே யல்லாமல் வேறூர்க்குமில்லை
சர்வியர் கிரீக்கருக்குச் சொன்ன-வார்த்தை
சமாசாரம் பல்கேரி தனரினதினலே
வர்மமிக வாகிய கிரீக்கரும் சர்வி-பல்கேரி
வனம்பெருகு சோபியாமேல் படையெடுத்தார்

கனகமணி குயிற்றிவளர் மண்டபமும் வீதி-மும்மத
கடகரியி னார்ப்பெனவே கலையோது மார்ப்பும்
தினமதுர கனிசொரியு மிஸ்தம்பூல் நகரில்-வாழும்
தேவரீர் சுல்தானு மறிந்தாரே செய்தி
வேளையிது வென்றெண்ணிக் கோமான்-வெகு
விரிவான உத்தரவு செய்தார்க ளப்போ
தாளாமல் வந்துசண்டை செய்த-பல்கேரி
தலைவர்களை சொல்லுகிறேன் கேளும்
எங்களுட தேசம் கொள்ளையடித்து-பல்கேரி
யினிதாக உங்களைக் காவலுக்கோ வைத்தான்
உங்களுட உயிர்தப்ப வென்றால்-இந்த
உற்றசெய்தி கேட்டவுட னோடிவிடு மென்று
யென்றுமே கட்டளைகள் செய்து-சுல்த்தான்
இபுறாகிம் பாட்சாவை முன்னா லழைத்து
வென்றியுறு துருக்கி நாலாயிரவர் சூழ-ஐந்து
வேகமுள்ள துரகதத்தில் வீரமுடனேறி
அதிரியா நோப்பல்தனை பிடித்து-இருவர்
அரசா யிருங்களென் றுறுதிமொழி கூறி
துதிபெருகு துங்கரண சிங்கம்-அந்த
துரையான அன்வருபேக்கு மறிவித்தார்
அண்டபகிரண்டமுத லெண்டிசையெலா நடுங்க-அப்போ
அடித்தாரே ரணபேரி சேடன்முடி யதிர
கண்டபல வண்டர்களு மண்டாம லோட-நல்ல
கனகதவில் மேளமொடு காளமெதிருக
ஜண்டாக்கொடிக ளசைந்தாட-ஒளிர்
தகதகெனப் பட்டாவும் கைவாளு மின்ன
கொண்டலிடி போல்குதிரை கனைக்க-நல்ல
குடைவிருது தம்பூரு பம்பைகளு மார்ப்ப
மகுடமுடி மன்னர்களும் போற்றும்-இபுறாகிம்
மன்னவரும் சைனியத்தைக் கூட்டி
விகடதட கடகரிகள் போலே-வேகம்
விருவிரெனக் குதிரைகளும்வெல்வ னெனச்-செல்ல

வரும்வழியில் சிற்றூரை யெல்லாம்-தனது
  வசமாக்கி வசதர்களை யப்பால் துரத்தி
பெரும்காவலாங்காங்கு வைத்து-பெரும்
  பேறான அட்ரியா நோப்பல்தனை தேடி
ஜட்டல்ஜாரிதுசெய்தி கேட்டு-அன்வர்
  தானெழுந்து வாராரே தன்து படைகூட்டி
கொட்டமிடுங் குதிரைகளிமேலறி-அங்கே
  குதித்தல்லோ வருகிறார்ன்வருபே யென்போர்

### அன்னவர்பே வருகிற விருத்தம்.

அண்டமுங் குலுங்க அவனியு மசைய
  அடற்பெரும் படைகளும் நடப்ப
கொண்டலங் குடையார் முகம்மதின் கலிமா
  குவிதர நாவினிற் சொலிப்ப
எண்டிசை விளங்கும் அன்வர்பே யென்னும்
  இறையவர் படையுடன் குழுமி
கண்டவர் நடுங்கக் கடலலை சுவறக்
  கடுநடைப் பரிவிடுத் தனனால்

செழுங்கதிர் வடிவேற் கிடந்தருண் டசையத்
  தினகர னொளியினிற் றிரிய
கொழுங்கதிர்ச் சுரிவாள் கரத்தினி லேந்தி
  குபிரவர் மனங்களு முருக
முழுமணி பதித்த முடிதரித் திலங்கு
  முதலவன் திருமறை நாவில்
பொழுதினு மகலா வன்வர்பே யென்னும்
  புரவலர் நடந்தன ரன்றே.

மல்லிகை வனமும் மகிழம்பூச் சோலை
  மங்கையர் மஞ்சன மாடும்
அல்லியு மாம்பல் கொட்டியுங் குமுத
  மழகுசெந் தாமரைப் பொய்கை

முல்லையங் கழனி சந்தனத் தருவும்
முதிரகிழ் பாடலம் தேமா
சில்லெனப் பூத்து திசைதொறுங் கமழும்
திருவுரு வதிரியா வடுத்தார்

கஞ்சமுங் குவளைக் கதலியும் பனசக்
கடிமணக் காவுகள் சூழ்ந்த
-பஞ்சமொன் றணுகா அதிரியா நோப்பில்
பாங்கினிற் பசங்குக ளியற்றி
துஞ்சவே படித்து சூமணத் துறத்தி
துதிபெறும் நகரம்கை யாட்சி
அஞ்சலென் றருள்வா யாதியே யென்று
அன்வரு மிரந்துநின் றனரால்

வேறு

அன்வருபே வந்தொரு செய்தி-அப்போ
அறிந்தாரெ யிபுறுகிம் பாட்சா
இன்றிறைவன் செய்தஉபகாரம்-நான்
யென்றைக்கு மறக்கேனென் றியம்பினர் வாயால்
கிடுகிடெனப் படைகளையும் நடத்தி-யெங்கும்
கீர்த்திபெரு மதிரியா நோப்ப லருகாகி
கெடிபெருகும் அன்வருபே முன்னில்-நின்று
கிருபையுடன் சலாமென்றுசொன்னார்
மன்னரெனும் அன்வருபேகேட்டு-பிரத்தி
வரிசைபெறச் சொல்லிப் பின்னும் சொல்வார்
இன்னேரம் யோசனைக ளென்ன-வென்று
இபுறுகீம்பாட்சாவை யேறிட்டுப் பார்த்து
இன்னகர மிப்போது பிடிப்போம்-இப்போ
ஏற்றுங்கள் பீசபீல் கொடியை யென்று-சொன்
சொன்னவுடன் சமர்க்கொடியை யேற்றி வெகு
துடியான ரணபேரி திடுதிடென வார்த்தார்
ரணபேரி சத்தமது கேட்டு-பல்கேரி
ரணவீரர் யாவர்களு மலங்கத்திலேறி
குணதிசையைப் பார்த்தார்களப்போ-துருக்கி
குரகதத்தினன் படையுடைய கூட்டமதைக் கண்டார்

நடனமிடு தூரகதத்தின் சேனை-கண்ட
நாழிகையிற் பீரங்கிபடபடென தீர்த்தார்
புடவிபொடி படவதிர்ந்து குண்டு-எரி
பொரிபறந்து வருகிறதைக் கண்ணாலே கண்டு
அன்வருபே யென்ற கொடுஞ்சிங்கம்-கோபம்
அனலாக மூண்டுமே யேதுசொல்லுவாராம்
மன்னர்முடி தள்ளிவிழத் தாக்கும்-நல்ல
வடிவிலகு குதிரைக்குச் சீனிவைக்க சொல்லி
முன்னூறு குதிரைகளை நடத்தி-ஒரு
மூச்சினில் கொட்டைக்குள் மொகுமொகனச் சென்று
பொன்னிலவு வொற்கதவுங் கோட்டை-அங்கே
புதிதான பல்கேரிக் காவலதுகண்டு
போட்டார்கள் வாளினால் வெட்டு-அப்போ
புராணுகே பல்கேரி சொல்ல முடியாது
காட்டாக்கி விட்டார்களந்த-பொல்லா
தருதலைபன் பல்கேரிப் படையை

பதம் பல்லவி.

சண்டையைக் கேளும் அன்வருபே செய்த
சண்டையைக் கேளும்.

அனுபல்லவி

1. சண்டையைக் கேளும்
வெண்டிரைசூழ்சோபியா
வண்டர்பெரும்படையைக்
கொன்றுகருவறுத்த -சண்டை

சரணங்கள்.

2. சண்டையைக் கேளும்
சண்டர் படையை வெல்ல.

சாரிகுதிரைவிட்டு ஜண்டா யெடுத்து கையில்
மாரிப்பிடிக் துருக்கி மண்டை சிதறடித்து
நேராய்க் கிழித்து ரணகீராய் நதியொழுக
கூர்வா ளுறைவிடுத்து குத்திப் பிளந்தெறிந்து

மண்டலங்களு மெச்ச
கண்டவ ரஞ்சிட
சண்டமா ருதம்போல
நின்று சமரஞ்செய்த—சண்டை

3. விண்டிடக் கேளும்
வீணர் படையை வெல்ல
வேலா யுதமெடுத்து விட்டுத் துளைப்படுத்தி
பாலாயெடுத்துக்கையில் படைகள் சிதறடித்து
தூளா யெழும்பச்செய்து துண்டு பறக்கடித்து
அலையிற் றுரும்பதுபோ லாட்டி வசுதர்களை
பட்டணைக் கேளும்
தீட்டினர் மாண்டிட
கொட்டமிடுங் குதிரை
விட்டுத்துகள் படுத்த—சண்டை
கண்டபடி துண்டு துண்டாய் வெட்டி-பல்கேரி
யனைக்கா யிறந்தவர்க ளெழுநூறு பேர்கள்
மாண்டவர்போய் மீண்டிருந்த பேரை-துருக்கி
வளைந்தல்லோ சிறையாகப் பிடித்தார்
பல்கேரி மைந்தனையும் பிடித்து-அன்வர்
பாராவி லடைக்கும்படி சொன்னார்
சிலுவைக்கொடி யத்தனையும் கிழித்தெறிந்துவிட்டு-லோகம்
சிறந்திலங்கு இளம்பிறையின் கொடியேற்று மென்றார்
அலங்கத்தி லிருந்தகொடி யெல்லாம்-துருக்கி
அத்தனையுங் கிழிறக்கி டாருய்க்கிழித்து
துலங்கு மிளம் சந்திரனொளிர் கொடியை-மேலே
சுருக்காயுயர்த்திவிட்டார் சுழன் றலையாட
வானவரும் பூமாரி பொழிந்தார்-இந்த
வையகத்துமுஸ்லீன்க ளனைவோரு மகிழ்ந்தார்
தினகரனும்சந்திரனுமுள்ளநாள் மட்டும்-ஆதி
நீதேனக்கிக்கான்வளர சித்தமருள்வாயே
நற்றமறைற் றேழனுள்ள நாள்மட்டும்-இந்த
நவரத்னமாமறையின் கொடிதுலங்கவேண்டும்

நற்றவஞ்சேர் அன்வருபே யப்போ—அதிரியா
நகரெல்லாந் தனதாவச மாக்கி
மேல்சொன்ன ஆண்டுபதி மூன்றில்—ஏசு
விளங்குகின்ற ஜூலாயி மாதமொரு ஏழில்
வல்லபுக ழதிரியா நோப்பல்—நல்ல
வாழ்வுபெறு துருக்கியுட கைவசத்தி லாச்சு
செப்பரிய காவல்களும் வைத்து—அங்கே
சிறையிலகப் பட்டவரைச் சேரவே கூட்டி
ஒப்பிலான் கிருபைகளி னாலே—இஸ்தம்பூல்
ஒசுவாக அனுப்பினா னன்வருபே யப்போ
அதிரியா நோப்புல்தனைப் பிடித்து—அன்வர்
அலங்கத்தில் கொடியேற்றி அரசிருக்கும் செய்தி
மதூரமொழி காதினால் கேட்டு—அங்கே
வந்திருக்கும் சிறைச்சாலை சனங்களையுங் கண்டு
சலதிமணி சூலவுருவ மணிமகுட சுல்தான்-வெகு
சந்தோஷமாகவே யேதுசொல்லு வானும்
இலகுநவ தரளமணி யிருசுடரு மொவ்வா-ஆதி
யிறையவனை யனுதினமு மிறந்திறைஞ்சு மக்காம்
எல்லா மலங்கரிக்கச் சொல்லி-இஸ்தம்பூல்
ஏகமகிழ்வாகவே மௌலீது மோதி
சொல்லொண்ணாச் சந்தோஷமாகி-அந்த
துரையாமுகம்மதுகான் யேது சொல்லுவாராம்
பல்வளமுஞ் சூழுநகர் சோபியா மட்டும்-நமது
பாராசுக்குள்ளாக்க வேணுமெனச் சொல்ல
சொல்படியே துருக்கிகளும் கேட்டு-தடம்
சூழுகின்ற பிலிப்போலி நகர்மட்டும் பிடித்தார்
அறிந்துமே பல்கேரி ராஜன்-இது
அநியாய மென்றல்லோ அரசர்கட்குச் சொல்ல
தெரிந்துமே பேரரச ரெல்லாம்-இது
சரியல்ல வென்றுசொல்லி துருக்கிகளுக் குரைக்க
நாங்கள்படும் பாடுகளைப் பார்த்து-நீங்கள்
நகைத்தல்லோவிருந்தீர்கள் பேசாம லப்போ
உங்களுட சொல்நம்ப மாட்டோம்-என்று

உற்ற செய்தி கூறினுருதுமானியரப்போ
அதிரியாநோப்பல் தனைபரசர்-அந்த
அன்பனெனும் பல்கேரிக் களித்துவிடச் சொன்ஞர்
இதுசெய்தி அவுஸ்த்திரியாபிருஞ்சும்-பேச்சு
அடாது என்றுசொல்லி ஜர்மனும் சொன்ஞர்
பல்கேரி சண்டை யிதுமட்டும்-வெகு
பட்சமுடன் பேசியே சமாதானமாஞர்
அல்பேனி சர்வியரும் சண்டை-அது
அனபேர்க்கும் குளம்புமோ நோக்கம்
இக்கவிதை செப்பவே யின்பமுடன் கேட்டு-பொருள்
ஏகமா யெடுத்தளித்தா ரிமாம்சாய்பு தானும்
மிக்கபெரும் வியாபாரம் ஹினயத்துல்லா-அவர்
வெகு பிரியமாகவே பொருளுதவி செய்தார்
இன்பமுடன் கேட்டுமே பக்கிரிசாய் பென்னும்வியாபாரி
அனுதினமுங் கேட்டுமே யளித்தார்பொருளுதவி
சொன்னமொழிமாருத மூன்றுபேர் பொருளுதவி-இதை
துப்தாக அச்சிலிடத் தூயனருள் புரிவான்
மாட்சிமைச் சுல்தானும் வாழி-அந்த
மன்னர்புக ழுன்வருபே வாழி
மீட்சிபெரும் துருக்கிகளும் வாழி-நல்ல
மேலான முஸ்லீங்களனைவோரும் வாழி
படிப்பவரும் கேட்பவரும் வாழி-இதற்கு
பணமீந்த பேர்கள்மிக வாழி
படிமீதி லச்சிடுவர் பண்பர்கவாழி-யோக
பாஞானி அனைவோரும் பண்பாக வாழி

விருத்தம்

ஆதிதன்கிருபை யாலே அகலிடத் தரசுசெய்யும்
நீதிசேர் துருக்கி சண்டை நிகழ்த்திடக்கேட்டதாலே
சோதிதன் னருளினலே சுருக்கிய கவிய தாக
[illegible] ஆகம்பாவா செப்பினேன் பாரிலன்றே.
[illegible]அதிரியாநோப்பல் துருக்கிசண்டை
முற்றிற்று.